ப்லவ ஆ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2021

மலர்: 4
இதழ்: 3

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஶம்



MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com



நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் ஆஸ்தானம்

ப்லவ ஆ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2021

ஸ்ரீ:

மலர்: 4
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: M.K.S. Mohan Babu & P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

சூழ்நிலையின் நிர்பந்தத்தையும் அரசின் அறிவுரைகளையும் ஒட்டி நமது லௌகிக கர்மங்களும் சில காலமாக குறைந்த பக்ஷநிலையை அடைந்துள்ளது. ஆலயங்களிலும் எம்பெருமான் கைங்கர்யங்கள், விட்டுப் போகாமல் இருக்கும் அளவுக்கு நடந்து வருகின்றன. நம் 'தேசிக ஸந்தேசமும்', மீண்டும் மின்-ஏடாக (E- edition) வெளி வருகிறது.

காலத்தைக் கடந்தது எதுவும் இல்லை; நம் துன்பங்களுக்கும் ஒரு எல்லை இருக்கவேணும் அல்லவா? அதுதான் என்ன?

இதுபோன்ற நிலையை எதிர்கொண்ட ஸ்வாமி தேசிகன், தன்னுடைய 'அபீதி ஸ்தவம்' எனும் ஸ்தோத்ரத்தில் ஸாதிக்கிறார்: ''இமாம் அபயஸித்தயே படத ரங்க பர்த்து: ஸ்துதிம்ந பயம் த்யஜத பத்ரம் இதி அபிததத் ஸ: வ: கேசவ: ஸ்வயம் கன க்ருணாநிதி: குணகணேந கோபாயதிநந'' அதாவது, ''இந்த ஸ்தோத்ரத்தை எவ்வித அச்சமும் ஒழிவதற்கு பாராயணம் செய்யுங்கள்; 'அச்சத்தை விடுங்கள்; உங்களுக்கு நன்மை உண்டாகும்' என அருளிச்செய்தவனும், மிகுந்த கருணைக்கு உறைவிடமும் நற்குணக் கூட்டம் உடையவனுமான அந்த எம்பெருமான்தானே உங்களைக் காக்கிறான்'' என்கிறார்.

மேலும் நமக்கு நம்பிக்கை ஊட்டுவதற்கு, 'ப்ரஹ்லாதன், காகன், கஜேந்த்ரன், த்ரௌபதி, விபீஷணன், காளியன், இடையர்கள், அம்பரீஷன் முதலானோர் எம்பெருமானை சரணமடைந்து பயத்தினின்று எவ்விதம் விடுதலை பெற்றாரோ அவ்வாறே நாமும் பயம் நீங்கப் பெறுவோம்'' எனவும் ஸாதிக்கிறார்.

நாமும் ச்ரத்தையுடன் அபீதிஸ்தவத்தை பாராயணம் செய்வோம். ஆனி பிறந்து ''வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று'' என்றவாறு நற்செய்தியுடன் மீண்டும் ஸந்திப்போம்.

வைகாசி மாதத்தின் கீழ்க்கண்ட உத்ஸவங்களின் விசேஷ புகைப் படங்களுடன் இம்மாத மலர் இதோ உங்கள் வசம்...

- ✓ வஸந்தோத்ஸவம்
- ✓ நம்மாழ்வார் உத்ஸவம்
- ✓ ச்ரவணம் ஆஸ்தானம்
- ✓ லகு ஸம்ப்ரோக்ஷணம் (முன் அட்டை)

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

And Finally, It's Time For Brahmotsavam

FROM THE DESK OF TRUSTEES

The extension of lockdown in the wake of the second wave of COVID -19 is unfortunate as it has caused a great deal of disruption to the common man's livelihood. It has dampened the spirits of not only the general public but also those connected with the Devasthanam. However, the silverlining is the recent trend of a significant drop in new cases. We pray to the Acharyan and the Divya Dampathis to bestow their blessings for normal life to resume sooner than later.

In order to avoid a catch-22 situation as it happened last year, it was decided to perform the Brahmotsavam for the 'Plava' year as soon as possible. Accordingly, the same is being held from June 11 to 20, observing all guidelines and protocols prescribed by the Central and State governments. Prior to the Brahmotsavam, an atonement (Prayaschittham) in the form of 'Laghu Samprokshanam', as advised by scholars and our temple Archakas, was conducted from June 7 to 9 with Saptha Kaanda Parayanam and the entire Divya Prabandham and Desika Prabandham.

In the month of Vaikasi, Nammazhwar Utsavam was celebrated for 10 days as well as Nrusimha Jayanthi. The festivals scheduled for Aani are Sudharsana Jayanthi, Periyazhwar Satrumurai, Nathamunigal Satrumurai and the seven-day Kodai Utsavam.

We thank all the Archakas and other temple staff, well-wishers, and devotees for their continued co-operation. We express our gratitude to Sri R. Ravi of Mylapore for offering special Sambhavana to all the Archakas and other Kainkaryaparas of the temple.

ஸ்ரீ:

ப்லவ வருட ஆனி மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
ஜூன்/ஜூலை	ஆனி					
20.6.2021	6	தசமி	ஞாயிறு	சித்திரை	ப்ரஹ்மோத்ஸவம் 10 ஆம் நாள். காலை – திருமஞ்சனம். ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி சக்ரத்தாழ்வார் – மூலவர், உத்ஸவர் திருமசனம் – ஆஸ்தானம். மதியம் – த்வாதச ஆராதனம். மாலை: வெட்டிவேர் சப்பரம். இரவு – த்வஜ அவரோஹணம்	ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி – ஸ்ரீ N.R. ராமஸ்வாமி
21.6.2021	7	ஏகாதசி	திங்கள்	ஸ்வாதி	பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் – காலை பெருமாள், பெரியாழ்வார் திருமஞ்சனம் – மாலை பெருமாள் கருட வாஹனம், பெரியாழ்வார் யானை வாஹனம் உள்புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. விடையாற்றி 1 ஆம் நாள். காலை திருமஞ்சனம்	பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட்.
22.6.2021	8	த்வாதசி / த்ரயோதசி	செவ்வாய்	விசாகம்	நம்மாழ்வார். விடையாற்றி 2 ஆம் நாள். காலை திருமஞ்சனம்	
23.6.2021	9	சதுர்தசி	புதன்	அனுஷம்	ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம் – காலை – பெருமாள், நாதமுனிகள் திருமஞ்சனம் – மாலை பெருமாள், நாதமுனிகள் உள்புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. விடையாற்றி 3 ஆம் நாள். காலை திருமஞ்சனம். இரவு: புஷ்ப பல்லக்கு	ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்ட், ஸ்ரீ A. வாஸுதேவன் – ஸ்ரீ N.V. பாலாஜி
24.6.2021	10	பௌர்ணமி	வியாழன்	கேட்டை	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் உள் புறப்பாடு	ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன்
25.6.2021	11	ப்ரதமை	வெள்ளி	மூலம்	பெருமாள் தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் தாயார் உள்புறப்பாடு	ஸ்ரீ அத்திகிரி அருளாளன்
26.6.2021	12	த்விதீயை	சனி	பூராடம் / உத்தராடம்	ஸேனைநாதன்	
27.6.2021	13	த்ருதீயை	ஞாயிறு	ச்ரவணம்	காலை – பெருமாள், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தேசிகன் உள் புறப்பாடு. பின்பு ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	கொடநகர் Dr. S. துரைஸ்வாமி ஐயங்கார் பண்ட்
28.6.2021	14	சதுர்த்தி	திங்கள்	அவிட்டம்	பூதத்தாழ்வார்	
29.6.2021	15	பஞ்சமி	செவ்வாய்	சதயம்	காலை – பேயாழ்வார் – திருமஞ் சனம் – மாலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு	ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்

30.6.2021	16	ஷஷ்டி	புதன்	பூரட்டாதி	திருமால்வடை	
01.7.2021	17	ஸப்தமி	வியாழன்	பூரட்டாதி	திருமால்வடை	
02.7.2021	18	அஷ்டமி	வெள்ளி	உத்தரட்டாதி	பெருமாள் தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் தாயார் உள்புறப்பாடு	ஸ்ரீமதி A.L. ரங்கமணி
03.7.2021	19	நவமி	சனி	ரேவதி	திருமால்வடை	
04.7.2021	20	தசமி	ஞாயிறு	அச்வினி	திருமால்வடை	
05.7.2021	21	ஏகாதசி	திங்கள்	பரணி	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை - பெருமாள் உள் புறப்பாடு	ஸ்ரீ ராஜகோபாலன்
06.07.2021	22	த்வாதசி	செவ்வாய்	க்ருத்திகை	திருமங்கையாழ்வார்	
07.7.2021	23	த்ரயோதசி	புதன்	ரோஹிணீ	ஸ்ரீ கண்ணன் ஆஸ்தானம்	
08.7.2021	24	சதுர்தசி	வியாழன்	ம்ருகசீர்ஷம்	திருக்கச்சிநம்பிகள்	
09.7.2021	25	சதுர்தசி / அமாவாசை	வெள்ளி	திருவாதிரை	பெருமாள் தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். தாயார் உள்புறப்பாடு	ஸ்ரீ ஸ்ரீராமன்
10.7.2021	26	கோயில் அமாவாசை	சனி	பூனர்வஸு	கோடை உத்ஸவம் 1 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீ K.S. ஸந்தானம், ஸ்ரீ K. வரதராஜன்
11.7.2021	27	ப்ரதமை	ஞாயிறு	புஷ்யம்	கோடை உத்ஸவம் 2 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீமதி L. வத்ஸலா, ஸ்ரீ V.P. ப்ரேம்குமார்
12.7.2021	28	த்விதீயை	திங்கள்	ஆயில்யம்	கோடை உத்ஸவம் 3 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ K. ரங்கராஜன்
13.7.2021	29	த்ருதீயை	செவ்வாய்	மகம்	கோடை உத்ஸவம் 4 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீ T.C. ரங்கராஜன், ஸ்ரீ G. பத்ரிநாராயணன்
14.7.2021	30	சதுர்த்தி	புதன்	பூரம்	கோடை உத்ஸவம் 5 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோகன், ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன்
15.7.2021	31	பஞ்சமி / ஷஷ்டி	வியாழன்	உத்தரம்	கோடை உத்ஸவம் 6 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீ Dr. P. க்ருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன்
16.7.2021	32	ஸப்தமி	வெள்ளி	ஹஸ்தம்	தக்ஷிணாயன புண்யகாலம். காலை - பெருமாள், தாயார் மூலவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை பொழுதுடன் ஆராதனம் - பெருமாள் தாயார் உள் புறப்பாடு. கோடை உத்ஸவம் 7 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு	ஸ்ரீ S. ராமஸ்வாமி - ஸ்ரீ S. பார்த்தஸாரதி. கோடை உத்ஸவம்: ஸ்ரீ R.S. ராகவன், ஸ்ரீ N.R. ஸ்ரீநிவாஸாசார்யர்

ஸ்ரீ:

அருளிச்செயலில் பாகவதர்களின் பெருமை - 7
பயிலும் சுடரொளி - திருவாய்மொழி 3-7 (தொடர்ச்சி)

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

சென்ற இதழில் 'பயிலும் சுடரொளி' பதிகத்தின் முதல் ஐந்து பாசுரங்களை அனுபவித்தோம். இனி...

6. அளிக்கும் பரமனைக் கண்ணனை ஆழிப்பிரன் தன்னை ★
துளிக்கும் நறுங்கண்ணித் தூமணிவண்ணன் எம்மாந்தன்னை ★
ஒளிகொண்ட சோதியை உள்ளத்துகொள்ளும் அவர்கண்டீர் ★
சலிப்பின்றியாண்டு எம்மைச் சன்மசன்மாந்தரம் காப்பரே.

எம்பெருமானுடைய திவ்ய சேஷ்டிதங்களைச் சொல்லும் ஸந்தர்ப்பத்தில், அமுதளித்தைச் சிறப்பாகச் சொல்லி, இதுமட்டுமல்லாமல், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களில் உட்பட்ட ஸ்திதி என்னும் ரக்ஷணமெல்லாம் இவனே செய்கிறான் என்று சொல்லத்தொடங்கி, அதனை முக்கியமாக்கி, அத்துடன் மற்ற கீழ்ச்சொன்ன அம்சங்களையும் கூட சேர்த்தனுபவிக்கும் பெரியோர்களே நமக்கு ரக்ஷகர்கள் என்கிறார் இப்பாசுரத்தில்.

எல்லாவிதமான ரக்ஷணமும் செய்பவனாய், பரவாஸுதேவன் முதல் கண்ணன் வரையிலான ரூபமுடையவனும், திருவாழியைக்கொண்டு உபகாரம் செய்கின்றவனும், தேனைப்பெருக்குகின்ற மணம் மிக்க மாலைகளைத் தரித்தவனும், ஹேயப்ரத்யநீகனும், நீலமணிபோன்ற நிறத்தை உடையவனும், ப்ரபையோடு கூடின சுடருமான, எமது ஸ்வாமியான திருமாலை, தங்கள் ஹ்ருதயத்தில் வைத்து த்யானிப்பவர்கள், அவர்களுக்கு அடியாராகிய நம்மை சிறிதும் விடாதபடி, நியமித்துக்கொண்டு, எல்லா ஜன்மங்களிலும் ரக்ஷிக்கின்றவராவர்கள் என்கிறார் ஆழ்வார்,

எம்பெருமான் ஆச்ரிதர்களைக் காக்க, தான் அந்தர்யாமியாய் மறைமுகமாகச் செய்யும் ரக்ஷணமெல்லாம் போதாதென்று, பல அவதாரங்கள் எடுத்தும் காக்கின்றான். மேலும், தான் அவதரித்து போதாமல், தன்னுடைய திவ்யாயுதங்களை அளித்தும் காக்கின்றான். மேலும், தன் திருமேனியழகைக் கண்டு, கலந்து, களிக்க ஆசைப்பட்டார்க்கு, அவர்கள் கட்டின அழகிய மாலைகளையணிந்து, அவர்களுடைய அநிஷ்டங்களைப் போக்கித் தன் திருமேனியை அனுபவிக்கச்செய்து மிகவும் ஸுலபனாகிறான். ஆச்ரிதர்களோடு இவ்வாறு கலந்து பரிமாறினபிறகே அவன் திருமேனிக்கும் புகர் உண்டாகிறது. இப்படி அவன் செய்யும் அளிப்பையும், அதனால் அவனுக்கே யாம் பலனையும் நன்காராய்ந்து, இந்நிலையிலே அவனை உள்ளத்தில் த்யானம் செய்கின்றவரே நம்மைக் காக்கின்றவர். இத்தகைய பாகவதர்கள் நம்மிடம் குற்றம் கண்டாலும், நமக்கு நிக்ரஹம் செய்யாமல், நம்மையாண்டு, நல்வழி நடத்தி அநுக்ரஹரக்ஷணமெ செய்வார்கள். ஆகையால் அவர்களே நமக்கு ஸ்வாமிகள் என்றபடி.

7. சன்மசன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய் ★
தன்மைபெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க்கொள்ளும் அப்பனை ★
தொன்மை பித்ற்றவல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர் ★
நன்மைபெறுத்து எம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பரே.

ஆழ்வார், மேல் பாசுரத்தில் பொதுவாக எம்பெருமான் எல்லோருக்கும் லீலாவிபூதியில் செய்யும் ரக்ஷணத்தை அருளினார். இப்பாசுரத்தில், மோக்ஷமளிப்பதென்ற சிறந்த ரக்ஷணத்தைச் சொல்லுகின்றவராய், அதில் ஈடுபட்டாரே ஸ்வாமிகள் என்கிறார்.

தன்னை ஆச்ரயித்தவர்களை, எல்லாப் பிறப்புக்களிலும் ரக்ஷித்து, மோக்ஷமளிப்பதாகக் கொண்டு, அவர்களைப் பரமபதம் சேர்ப்பித்து, ஒவ்வொரு ஜீவனையும் அதனுடைய இயற்கை நிலையைப் பெறும்படி செய்து, தனது திருவடிகள் இரண்டின்கீழே சேர்த்துக்கொள்கின்ற, ஆச்ரிதனின் சிரஸில் திருவடியை வைத்தருள்கின்ற, ஸ்வாமியான திருமாலை, அவனுக்கு இயற்கையாய் அனாதியான குணவிசேஷத்துடன் அடைவுகெடப் புகழ்வதற்கு ஸமர்த்தரானவர்களை, அதாவது இது இயற்கையானது, மற்றது வந்தேறி என்று தெளிந்து சொல்லவல்லார்களைப் புகழும் அடியார்களே, நம்மை சேஷத்வமாகிற ஸம்பத்தைப் பெறுவித்து, வரும் காலமெல்லாம் நாம் உஜ்ஜீவித்திருக்க நடத்தும் பரம ஆப்தர்களாவர் என்கிறார்.

பொதுவாக எல்லோரையும் ரக்ஷிப்பது என்பது எம்பெருமான் ஸங்கல்பம். அது ஒரு ஜன்மம், இரண்டு ஜன்மம் என்றில்லாதபடி, அடியிலிருந்தே அனாதிகாலமாகவே, ஸஹஜ, ஸௌஹார்த்தமென்ற நிர்ஹேதுக க்ருபை மூலமான அஜ்ஞாத ஸுக்ருதாதிகளைக் கொண்டு காப்பதிலேயே கண்வைத்திருக்கும் அப்பன் இவன். நடுநடுவே செய்யும் நிக்ரஹமெல்லாம் அவனுக்கு வந்தேறியானபடியால் அவைகள் தொன்மையாகாது என்று தெளிவுற்று, ஒவ்வொரு ஜீவனையும் உய்விக்க எம்பெருமான் படும்பாடுகளைப் பற்றி ஆதாரத்துடன் பிதற்றுகின்றாரின் ஈடுபாட்டைக் கண்டு களித்துப் பிதற்றும் அடியார்களே நமக்கு நாதர். அனாதியாக ப்ரயாசைப்பட்டுத் தன் தாளிணைக்கீழ் சேர்ப்பித்துக் கொள்ளும் அவனைவிட, அவனை ஆச்ரயித்தவரே எல்லா நாளும் நம்மை உய்யக்கொள்கின்றவர்

என்றபடி.

8. நம்பனை ஞாலம் படைத்தவனைத் திருமார்பனை ★
உம்பருலகினில்யார்க்கும் உணர்வரியான் தன்னை ★
கும்பி நரகர்களேத்துவரேலும் அவர்கண்டீர் ★
எம்பல்பிறப்பிடைதோறு எம்தொழுகுலம் தாங்களே.

பாகவதர்கள் நம்பப்படுகின்றவர்கள் என்றும், அவர்கள் அத்தன்மை பெற்றது எம்பெருமானின் அனுக்ரஹத்தினாலே என்று மேல் பாசுரத்தில் கூறி, இத்தகையவனே நம்பப்படுகின்றவன் என்கிறார் இப்பாசுரத்தில். இந்நிலையும், இதற்குத் தக்க செயலும், அவன் இறையும் அகலகில்லேனென்று அலர்மேல்மங்கை உறைமார்பன் ஆகையாலேயாம். அதனாலன்றோ, அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா என்றபடி, அவனது மேன்மை யாருக்கும் அளவிடமாட்டாதபடி இருப்பதென்று தெளிந்து ஏத்துகின்றவர் குலமே நாம் தொழக்கூடியவது என்கிறார்.

பிராட்டியைத் தன் மார்பிலுடையவனும், அதனால் நம்பப்படுகின்றவனாய் நமக்கு ஸ்வாமியும், அதனால் உலகங்களையெல்லாம் ஸ்ருஷ்டித்தவனும், மேலுலகத்திலிருக்கும் ப்ரம்ம, ருத்ராதிகள் போன்றோருக்கும் அறிவதில் அருமையாயும் ஆகின்றவனை, ஸ்தோத்ரம் செய்கின்றவர்கள், கும்பீபாகமென்ற நரகத்தை அடையக்கூடிய பாபத்தைச்செய்தவர்களாய் இருந்தாலும், அவ்வாறு பாபமுடையவர்களாயிருந்தே, எமது பலவகை ஜன்மங்களின் அவகாசம் முழுமையும் எம்மால் அடையப்பெறும் குலமுடையவர்களாவர் என்கிறார்.

பரத்வமே மிக விளங்குகிறதாக்க் கொண்டு, எம்பெருமானின் வாத்ஸல்யத்தை தேவர்களும் நன்கறிந்தவரல்லர். ஸௌலப்யாதிகளைக் கண்டவர் பரத்வத்தை மறந்தொழிகின்றனர். காக்கையைக் காத்ததும். இராவணனைக் காக்கக் காத்ததும் அறியப்பெற்றால், கும்பி நரகத்தில் விழ இருப்பாரையெல்லாம் காப்பானென்பதும் தெளியலாகும். இது எப்படி என்றால், அவர்கள் அவனை ஏத்துகின்றவர்களாகில், இந்த குணமுண்டாகில், அவர்கள் செய்த பாபத்தை நாம் கவனியாமல் எல்லாப் பிறப்பிலும் அவர்களையும், அவர்கள் தம் ஸந்ததியையும் தொழலாம் என்றபடி.

9. குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து ★ எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும் ★
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்று உள்
கலந்தார் ★ அடியார்தம் அடியார் எம்அடிகளே.

முதல் பாசுரத்தில் 'எவரேலும்' என்பதற்கு, கொடிய நிஷித்த கர்மங்களைச் செய்தவர் என்ற பொருள் கூறப்பட்டது. எத்தகைய ஸதாசாரமில்லாதாரும், எந்த சாதியாரும் என்ற பொருளும் கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டுக் கொண்டு, எம்பெருமானுக்கு அடியார், அல்லது அடியார்க்கு அடியார் என்று கீழ்க் கூறப்பட்டவர் மட்டுமின்றி, அவர்களுக்கு அடியாரும் ஸ்வாமிகளெனவும் அருளிச்செய்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

அநுலோம, ப்ரதிலோம சாதிகளுக்கு ஆதாரங்களான ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ராதிகளைக் காட்டிலும், அந்த ப்ரதிலோம குலத்திற்கும் கீழாகப்பிறந்து, சிறிதளவும் சாஸ்த்ரம் இசைந்த தர்மானுஷ்டானம் இல்லாதவர்களான, கடைசியான வர்ண ப்ரதிலோமர்களுக்கும், மேன்மேலான ப்ரதிலோமர்களானாலும், வலது திருக்கையினால் தரிக்கப்பட்ட திருவாழியாழ்வானை உடைய ஸ்வாமியாய், நீலமணி நிறமுடையவனுமான அவனுக்கு, தங்களை அடிமையென நினைத்து ஏகாந்தமான அடிமை கொண்டவர்களுக்கு, தாஸரானவர்களுக்குத் தாஸரானவர்கள் எங்களுக்கு ஸ்வாமிகளாவர் என்கிறார் ஆழ்வார்.

ஒவ்வொரு ஜாதியிலும் பல குலங்களான உட்பிரிவுகளுண்டு. ஸங்கரஜாதிகளும் குலங்களாம். இங்கு 'சண்டாள' என்ற முதல்சொல் தர்ம சாஸ்த்ரங்களில் சொன்ன ப்ரதிலோம ஜாதிவிஷயத்தில் முக்கியம். இரண்டாம் சொல்லான 'சண்டாளர்கள்' என்றது, அவரைப் போல் மிக்க ஈனரென்கிறவாறு, வர்ணப்ரதிலோம சாதிக்கும் கீழான ஸங்கர ப்ரதிலோமஜர் என்றபடி. இப்படிப்பட்டவர்களை ஸ்வாமிகளென்றது உலகவழக்கிற்கு விருத்தமாயிற்றே என்று எண்ணவேண்டாம். ஆழ்வார் அருளின பிறகு அவநம்பிக்கை தகாது. ப்ராக்ருத ஜனங்களின் நடை ப்ரமாணமாகாது. மஹா ஜனங்களான வைஷ்ணவப் பெரியோர்களின் ஆசாரமும் இதுவேயாம். இப்படிப்பட்டவர்கள், வேறு பலங்களைப் பற்றி வெளியில் செல்லாமல், எம்பெருமானுக்கு அடிமை என்று நினைத்து, அநந்யராய், உள்புகுந்து கைங்கர்யம் செய்பவர், அவர்களுக்கும் நமக்கும் உள்ளம் கலந்திருக்குமல்லாது, உடல் கலப்பில்லை. உடலைப் பற்றிய சாதி தர்மங்கள் அந்தந்த சாஸ்த்ரப்படி பிரிக்கப்பட்டிருந்தாலும், அதனால் மற்ற ஸம்பந்தம் கொள்ளக்கூடாது என்றாலும், விஷ்ணு பக்தியென்ற மிகச்சிறந்த நலமொன்றே ஐகமத்யத்தினால் அவர்களை நமக்கு ஸ்வாமிகள் ஆக்குகிறது என்பது இப்பாசுரத்தின் சிறப்பு. 'அடியார்' ஸ்வாமியை உடையவர், ஸ்வாமிகளைப் பற்றியிருப்பவர். 'அடிகள்' ஸ்வாமிகள்.

10. அடியார்ந்த வையமுண்டு ஆலிலையன்னவசஞ் செய்யும் ★
படியாதுமில் குழவிப்படி எந்தைபிரான் தனக்கு ★
அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்
கடியாரடியார்தம் ★ அடியார் அடியோங்களே.

ஒருவரையும், இரு புருஷரையும் போலே, மூவரை இடையிட்டு, எம்பெருமானைப் பற்ற சேஷத்வத்தின் நீட்சியைச் சொன்னார். இப்பொழுது, இந்தப் பாசுரத்தில், எழுவரையிடையிட்டு அதனை அருளிச் செய்கிறார்.

மூவுலகென்றது போல், ஏழுலகமென்பர். எண்ணிக்கை அதிகமாகும் போது ஏழேழாகச் சொல்லுவது மரபென்பதனால், அதிலே நிலைநோக்கு ஆழ்வாருக்கு. முடிவுறாமல் நீண்டே செல்லும் சேஷத்வத்தைச் சொல்லும்போது, முடிவுறாமல் ப்ரளயத்திலும் நித்யமாயிருக்கும் திருமேனி திருவுள்ளத்தில்படட, அந்தப் பாலகனிடத்தில் ஈடுபட்டவராக ஸ்வாமிகளைக் கூறுகிறார். இவ்வளவு நீண்டு நிற்கும் பகவத் பாகவத சேஷத்வமானது, பகவத் சேஷத்வமென்றதிலே அடங்கிற்றென ஆராயும் ஆழ்வாருக்கு, உலகெல்லாம் அவன் சிறு வயிற்றிலே அடங்கிற்றெனத் தோன்றிற்று. ஆக, பாகவதர்களுக்குத் தான் சரமாவதி தாஸனாவேன் என்கிறார் ஆழ்வார்.

த்ரிவிக்ரமாவதாரத்திலே தன் திருவடி நிறைந்திருந்த உலகினைப் புசித்துவிட்டு, ஆலமரத்தின் ஓர் இலையிலே உண்டதற்கு வசப்பட்டிருக்கையை செய்கின்றவனும், ஒப்பு ஒன்றும் இல்லாத குழந்தையின் உருவை உடையவனுமான, தமக்கு ஸ்வாமியாய் இவ்வனுபவம் அளித்தவனுக்குத் தாஸர்களின், தாஸரானவர்களுகு, தாஸராகின்றவரின் தாஸர்கள் விஷயத்திலே தாஸரானவர்களுக்கு தாஸராயிருப்பார்களுக்கு அடிமை செய்கின்றவராக இருப்போம் என்றபடி.

இப்பாசுரத்தில் முதலடியால், அகடித கடநா ஸாமர்த்யமும், மேலே ஸௌந்தர்யமும், பிரான் என்றதாலே காருண்யமும் குறிக்கப்படுகின்றது. அடியாரடியோங்கள் என்பது அடியாருக்கு அடியரானோம் என்றதாம். எம்பெருமானுக்கும், நமக்கும் இடையில் ஏழு புருஷர்களைக் கூறினார். ஸ்வாமி தேசிகனும், இவனையே யஸ்ஸப்த பர்வ வ்யதாந துங்காம், சேஷத்வ காஷ்டாம் அபஜத் முராரே: என்று தமது பாதுகா ஸஹஸ்ரத்தில் குறிப்பிடுகிறார். ஏழுக்கு மேல் அடியார்களைச் சொல்ல பாட்டில் இடம் போதாமையால் இவ்வளவோடு நின்றார் ஆழ்வார். உலகில் எம்பெருமானே சேஷத்வகாஷ்டை உடையவனென்று, சேஷித்வகாஷ்டையைத் தமக்கு விரும்பினார்.

11. அடியோங்கு நூற்றுவர்வீய அன்றைவர்க்கு அருள்செய்த நெடியோனை ★ தென்குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள் ★ அடியார்ந்த ஆயிரத்துள் இவைபத்து அவன் தொண்டர்மேல் முடிவு ★ ஆரக்கற்கிற்கில் சன்மம் செய்யாமை முடியுமே.

சேஷத்வகாஷ்டை வேண்டுமென்று சொல்லும் இத்திருவாய்மொழிக்குப் பலனை இந்தப் பாசுரத்தில் அருளிச்செய்கிறார் ஆழ்வார்.

ராஜ்யம் பெறவும், நிலைக்கவும் அடியானவைகள் ஓங்கியிருக்கப்பெற்ற துர்யோதனாதிகள் நூறுபேரும் சிறிதும் கொடுக்க முன்வராதபோது, அவர்கள் அழியும்படி பஞ்சபாண்டவர்களுக்கு தயை புரிந்தருளின மஹாபுருஷனைப் பற்றி, அழகிய திருகுருகூரில் தோன்றிய ஆழ்வாருடைய வாசிக கைங்கர்யங்களான, அடிகள் நிறைந்த பல விருத்தங்களான ஆயிரம் பாட்டுக்களில் அடங்கியதும், அந்த நெடியோனின் பக்தர்களை ப்ரதானமாகக் கொண்டவையுமான இந்தப் பத்துப் பாசுரங்களை பொருந்தக் கற்க வல்லவர்களுக்கு, மேன்மேலும் ஜன்மங்களைச் செய்யும் விரோதிகள் ஒழியும் என்று இத்திருவாய்மொழியைத் தலைக்கட்டுகிறார் ஆழ்வார்.

முதல் பாசுரத்தில், திருமேனி ஒளியிலும், ஸௌலப்யாதி குணங்களிலும் ஈடுபட்ட பக்தர்கள், தமக்கு சேஷிகள் என்றும்,

இரண்டாம் பாசுரத்தில், அவதாரத்திலும், மூலநிலையிலும், நான்கு புஜங்களையுடையவன் என்று அவயவ ஸௌந்தர்யத்தில் ஈடுபட்ட பக்தர்கள், தமக்கு சேஷிகளென்றும்,

மூன்றாம் பாசுரத்தில், அவனுக்குச் சிறப்பான அணிகளில் ஈடுபட்டாரைப் பணிந்தவர்கள், தமக்கு சேஷிகளென்றும்,

நான்காம் பாசுரத்தில், பொதுவான பல்கலன்களின் அழகில் மனம் வைத்தவர்களின் தொண்டர்கள், தமக்கு சேஷிகளென்றும்,

ஐந்தாம் பாசுரத்தில், அற்ப பலன்களையும் அளிக்கும் எம்பெருமான் என்று பேசுபவர்களைப் புகழ்கின்றவர்கள், தமக்கு சேஷிகளென்றும்,

ஆறாம் பாசுரத்தில், எல்லா ரக்ஷணமும் செய்யும் எம்பெருமானுடைய பக்தர்கள், தமக்கு சேஷிகளென்றும்,

ஏழாம் பாசுரத்தில், தன் திருவடிகளில் கைங்கர்யமாம் மோக்ஷத்தை அளிப்பவனின் மஹாகுணங்களைப் பேசுபவர்களைப் புகழ்கின்றவர், தமக்கு சேஷிகளென்றும்,

எட்டாம் பாசுரத்தில், பெரிய பிராட்டிக்கு ப்ரீதி பாத்ரமாய் ஹிதபரனாயிருப்பவனை ஏத்துபவர்கள், மஹாபாபங்களைச் செய்தரவானாலும், தமக்கு சேஷிகளென்றும்,

ஒன்பதாம் பாசுரத்தில், வலது திருக்கையில் திருவாழி விளங்க மணிவண்ணனாய் இருப்பவனை ஆச்ரயித்த சண்டாளர்களுக்கு அடியாரடியார்களும், தமக்கு சேஷிகளென்றும்,

பத்தாம் பாசுரத்தில், ப்ரளயத்திலும் நன்மையளிக்கும் அவனை ஆச்ரயித்தவர்களை எடுத்து, சேஷத்வத்தின் கடையெல்லையில் தம்மை நிறுத்தி, அவர்கள் பரம்பரை முழுமையும் தமக்கு சேஷிகளென்றும்,

பதினொன்றாம் பாசுரத்தில், அவர்களைப் போல தாமும் எம்பெருமானை அனுபவிக்க வேண்டுமென்ற அவாவினால் இவ்வாறு கூறினேன் என்றுரைத்து, இப்படி அவர்களிடத்தில் ஈடுபட்டதால் பெறப்படும் பலனை சொல்லியருள்கிறார் ஆழ்வார்.

பாகவதர்களின் பெருமை மேலும் வளரும்...

கண்ணுக்கினியன



வஸந்தோத்ஸவம்



ஸ்ரீ:

நம்மாழ்வார் உத்ஸவம் - முதல் ஒன்பது நாட்கள்

கண்ணுக்கினியன

நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் ஆஸ்தானம்

நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் ஆஸ்தானம்



கண்ணுக்கினியன

லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்

ஸ்ரீ:

லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்

கண்ணுக்கினியன

லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்

லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்

லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்

லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்



லகு ஸம்ப்ரோக்ஷண ஹோமம் / உத்ஸவம்

கண்ணுக்கினியன

லகு ஸம்ப்ரோக்ஷண உத்ஸவம் அத்யாபக, வேதபாராயண கோஷ்டி

ஸ்ரீ:

பெரியாழ்வாரும் கம்பனும்

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் எஸ். பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

நம் ஸம்ப்ரதாயத்தில் ஆழ்வார்களைத் தவிரவும் சிலரை ஆழ்வான் என்ற சொல்லைச் சேர்த்து மரியாதைசெய்வார்கள் — பரதாழ்வான், விபீஷணாழ்வான், கூரத்தாழ்வான் என்பதைப்போல. அப்படி நம் பூர்வர்களால் ஆழ்வான் என்ற பெயரைச்சேர்த்துக் கொண்டாடப்பட்டவர்தான் கம்பர். கம்பநாட்டாழ்வான் என்று கொண்டாடப்படும் கம்பனது இராமகாதையில் ஆழ்வார்களின் தாக்கம் நிறைய இருக்கும்.

நாதமுனிகளின் காலத்தவரான கம்பன் அவரிடம் பிரபந்தங்களை அர்த்தானுஸந்தானம் செய்திருப்பது அவனது பாக்களை நன்கு ஊன்றிப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். கம்பன் பல வைணவக்கோட்பாடுகளையும் இராமாயணத்தையும் அவரிடம் காலக்ஷேபம் செய்து, பின் இராமகாதையை இயற்றினான் என்பது நம் முன்னோர்களின் முடிவு. ஆனி ஸ்வாதியில் அவதாரம் செய்த பெரியாழ்வாரின் பாக்களின் தாக்கம் கம்பனிடன் எவ்வாறு தெரிகின்றதென்பதை ஓரிரண்டு கம்பன் பாக்களைக் கொண்டு இக்கட்டுரையில் சுருக்கமாக அனுபவிக்கலாம்.

பெரியாழ்வார் மூன்றாம்பத்து ஆறாம் திருமொழியில் கண்ணபிரான் குழலூதும் விதத்தையும் அதனால் அங்கு ஏற்படும் மாயங்களையும் பாடுகிறார். அத்திருமொழியில் ஒன்பாதாம் பாடலில் கார்காலத்தில் திரண்டு மேலெழுந்து தழைத்திருக்கிற கார்மேகம் போன்ற திருநிறத்தையுடையவனும், செந்தாமரையைச் சூழ்ந்துள்ள வண்டினம் போல் சுருட்சியும், இருட்சியும் உடைத்தான கேசங்களால் தாழ்ந்த முகமுடையவனுமான கண்ணபிரான் ஊதுகிற குழலோசையைக் காதால் கேட்டவளவிலே, மான் கூட்டங்கள் மேய்ச்சலையும் மறந்து, வாயில் கவ்விய புற்களும் வாயிலிருந்து நழுவி விழ, முன்னும் பின்னும் பக்கங்களிலும் அசையாமல் அறிவிழந்து, சுவரில் எழுதப்பட்ட சித்திரங்களைப்போல அசைவற்று நின்றன என்று கண்ணன் வேணுகான மகிமையைக் கொண்டாடுகிறார்.

திரண்டெழுதழைமழை முகில்வண்ணன்
செங்கமலமலர்சூழ் வண்டினம்போலே
சுருண்டிருண்ட குழல்தாழ்ந்த முகத்தான் ஊதுகின்ற
குழலோசை வழியே
மருண்டுமான்கணங்கள் மேய்கைமறந்து மேய்ந்தபுல்லும்
கடைவாய் வழிசோர
இரண்டுபாடும் துலுங்காப் புடைபெயரா



பெரியாழ்வார்

எழுதுசித்திரங்கள் போல நின்றனவே.
(பெரியாழ்வார் திருமொழி 3-6-9)

இப்பாசுரத்தில் வேணுகானம் கேட்ட மான்கள் நகராது நின்றதை எழுதிய ஓவியம் போல் அசையாது நின்றன என்று பெரியாழ்வார் இட்ட உவமை கம்பனை ஈர்க்கின்றது. தான் அயோத்திநகரை வருணிக்கும் நகரப்படலத்தில் அந்நகர மடந்தையரின் அழகையும் கற்பு நெறியால் அவர்கள் ஒளிர்ந்து விளங்குவதையும் காட்டுவதற்கு எழுது சித்திரம் என்ற இப்பதத்தைப் பயன்படுத்துகிறான். சாதாரணமாகவே சித்திரத்தில் எழுதிய பிரதிமைகள் கண்ணிமைக்காது. ஆனால் கம்பன் அவை கண்ணிமைக்காமைக்குக் காரணத்தைக் கற்பிக்கிறான். இதை ஏதுதற்குறிப்பேற்றவணி என்பர்.

பொழுது உணர்வுஅரிய அப்பொரு இல்மா நகர்த்
தொழுதகை மடந்தையர் சுடர்விளக்கு எனப்
பழுது அறு மேனியைப் பார்க்கும் ஆசைகொல்
எழுது சித்திரங்களும் இமைப்பு இலாதவே.
(பாலகாண்டம் - நகரப்படலம்)

பொன்மணிகளின் ஒளிமிகுதியால், இது இரவு, இது பகல் என்று பிரித்துப் பார்க்கமுடியாதிருக்கும் அயோத்தி நகரில், கற்பினால் ஒளிபெற்று, யாவரும் வணங்கத்தக்கவரான பெண்களின், சுடர்விளக்கென விளங்கும், குற்றமற்ற திருவுருவைக் காணவேண்டும் என்ற விருப்பத்தாலேயே எழுதுசித்திரங்கள் கண்ணிமைத்தல் இல்லாதவாயின என்று கூறினான்.

அடுத்து கம்பன் இந்த எழுது சித்திரத்தைப் பயன்படுத்துவது சுந்தரகாண்டத்தில் இரண்டு இடத்தில். அதில் முதல் இடத்தைப் பார்ப்போம். இலங்கையில் பிராட்டியை அனுமன் கண்டு தான் இராமனின் தூதன் என்று விவரிக்கும் முன் மரத்தின் மேல் அமர்ந்துகொண்டு அங்கு நடக்கும் காட்சி களைப் பார்க்கிறான். சீதை மிகவும் துயருற்று இருக்கிறாள். அவளது துயர நிலைக்கு இராமனின் நினைவுகள் காரணமாகின்றன.

அவ்வாறு அவள் நினைக்கும் எண்ண ஓட்டத்தைப் படம் பிடிக்கிறான் கம்பன். அவர்கள் நாடு துறப்பதற்கு முன்னால் நடந்த பட்டாபிஷேக ஏற்பாடுகளும் அதன்பின் அத்திரு இராமனை விட்டுப் போய் கானேக வேண்டிய கட்டாயம் வந்ததையும் நினைக்கிறாள். இராமபிரான் தனக்கு இளவரசுவெனப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறார்கள் என்று கேள்வியுற்றபோதிலும், உனக்கு பட்டம் இல்லை; நாட்டைத் துறந்து காடு செல் என்ற சொன்னபொழுதும் தன்னுடைய முகத்தில் எவ்விதமான மாறுதலையும் காட்டவில்லையாம்; பட்டாபிஷேகம் என்றபோது மகிழ்ச்சியோ, முடிதுறந்து காடு செல் என்றவுடன் வருத்தமோ அவன் முகத்தில் பார்க்கமுடியவில்லையாம். எந்தவித மாறுபாடுமின்றி முகம் ஒரே மாதிரி மலர்ந்தே இருந்ததாம்.

இராமனின் இவ்விதம் மாறுபடாத முகம் சீதைக்கு சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரையைப் நினைவு படுத்தியது என்கிறான் கம்பன். சித்திரத்தில் மலர்ந்த தாமரை எக்காரணத்தைக்கொண்டும் கூம்பாதன்றோ!

மெய்த்திருப்பாதம் மேவு என்ற போதினும்
இத்திருத்துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்.
(சுந்தரகாண்டம் - காட்சிப்படலம்)

இரண்டாவது, அனுமன் சீதாபிராட்டியிடமிருந்து விடைபெறுமிடம். இதைக் கம்பன் வருணிக்கின்ற பொழுது ஒரு அழகான விஷயத்தை அறிவிக்கின்றான். அனுமனிடம் தன் சூளாமணியைத் தருகிறாள் அடையாளமாக. அதனைத் தன் தலைமேல் கைவைத்துத் தொழுது அனுமன் வாங்கிக்கொள்கிறான். பின் ஒரு துணியில் பாதுகாப்பாய்ச் சுற்றிப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்கிறான். மூன்றுமுறை தாயாரை வணங்குகிறான். விடைகொடுக்க ப்ரார்த்திக்க அவளும் அன்புடன் ஆசீர்வதித்து அனுப்பினாள். அதன்பிறகு அங்கிருந்து அனுமன் நகர்ந்தான் என்கிறான்.

இப்படிச்சொல்லும் பொழுது சீதை எப்படியிருந்தாள் என்று காட்டவேண்டுமே! அதைக் குறிக்க கம்பன் எழுது பாவையைப் போன்றிருந்தாள் என்கிறான். முன்னம் இராமபிரானோடு சேர்ந்திருந்தபோதும் இப்போதும் தலைவனிடத்து அன்பு மாறாமல் இருந்தாள் என்பதைக் குறிக்க எழுது பாவை என்று அவளை வருணித்தான் கம்பன். பெரியாழ்வாரின் தாக்கம் அவனை இப்படிச் சிந்திக்கவைத்தது என்றால் மிகையாகாது.

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுதுறாவகை பந்தனை செய்தனன் வந்தித்து
அழுது மும்மை வலம் கொடு இறைஞ்சினன் அன்பொடு
எழுதுபாவையும் ஏத்தினள் ஏகினன் இப்பால்.
(சுந்தரகாண்டம் - சூளாமணிப்படலம்)

இனி அடுத்ததாகப் பெரியாழ்வார் திருமாலிருஞ் சோலை அழகரைப் பாடும் பதிகத்தில் ஒரு பாசுரம். இப்பாசுரத்தில் மூன்றாம் நான்காம் அடிகள் நமக்கு இங்கு அனுபவிக்க ப்ராப்தமாகிறது. இந்திரகோபம் என்று சொல்லப்படும் பூச்சிகள் எம்பெருமானுடைய திருப்பவளத்துக்கு ஒத்திருக்கைக்காக கண்டவிட மெங்கும் பரவிக்கிடக்கின்ற தாழ்வரையை உடைத்ததான திருமாலிருஞ்சோலை என்கிறார்.

சிந்தப் புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப் பலிகொடுத்து ஆவத்தனம்செய் அப்பன்மலை
இந்திர கோபங்கள் எம்பெருமான் கனி வாயொப்பான்
சிந்தும் புறவில் தென்திரு மாலிருஞ் சோலையே.
(பெரியாழ்வார் திருமொழி 4-2-9)

இந்த இந்திரகோபம் என்ற பூச்சிகள் சிவப்பு நிறத்தில் இருக்கும். சிவப்பு நிறம் ஒன்றையே ஒப்பாகக் கருதி அது எம்பெருமானது சிவந்த அதரங்களுக்குத் தாம் ஈடு என்று நினைத்து இறுமாந்து பரவிக்கிடக்கின்றதாம். அதுவும் சிந்தும் புறவில் -- பார்க்கும் இடமெல்லாம் பரவிக்கிடந்ததாம். இதே திருமாலிருஞ்சோலை அழகரை வருணிக்கும் நாச்சியார் திருமொழிப் பாடலில் ஆண்டாளும் தன்னுடைய தந்தை சொல்லை அடியொட்டி **சிந்துரச் செம்பொடிப்போல்**

திருமாலிருஞ்சோலையெங்கும் இந்திரகோபங்களே எழுந்தும் பரந்திட்டன என்கிறாள் **(நாச்சியார் திருமொழி 9-1).**

இந்த இரண்டு பாட்டாலும் கம்பனுக்குக் கிடைக்கும் விஷயங்களைப் பார்ப்போம். இந்திரகோபம் என்ற இப்பூச்சிகள் மலையடிவாரத்தில் எங்கும் பரவி இருக்கும் என்பதும், அது சிந்துரம் அதாவது சிவப்பு நிறத்தில் இருக்குமென்பதும், சிவந்த நிறத்ததான உதடுகளுக்கு உவமிக்கத் தகும் என்பன அவை.

கம்பன் இவ்விஷயங்களைக் கையாண்டிருக்கும் இடமே வேறு. இராமன் சிவதனுஸை இறுத்தான்; அதானால் சீதையைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறான்; தாங்கள் தங்கள் குமாரனின் திருமணத்திற்குச் சுற்றம் சூழ அவசியம் எழுந்தருளவும் என ஜனகனிடமிருந்து அழைப்பு ஓலை வருகிறது. தசரதன் தன் குடும்பத்தாருடனும் பரிவாரங்களுடனும் புறப்படுகிறான். ஒரு பெருஞ்சேனையாக அது மாறுகிறது. அவர்கள் தேர், யானை, குதிரை, பல்லக்கு, நடை என்று பலவிதமாகப் பயணிக்கிறார்காள். பயணத்தின் போது மாலை நேரமாகிறது; இரவு தங்கிச்செல்ல ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள்; அவ்விடம் சந்திரசைலம் என்ற மலையின் அடிவாரம்.

இதுமாதிரி ஒரு செய்திகூட மூல நூலான வான்மீகியத்தில் கிடையாது. இது முழுக்கக் கம்பனின் கற்பனை வளம். ஒவ்வொரு பாசுரமும் அறத்தையும் வேதாந்தத்தையும் நமக்குச் சொல்வதற்காகவே கம்பன் அமைத்துள்ளான். கிட்டத்தட்ட ஐந்நூறு பாசுரங்கள். மாகாவியமாக கம்பராமாயணத்தை உயர்த்துகிறான் கம்பன். அதில் பெரியாழ்வார், அவரிடமிருந்து அனைத்து அறிவையும் பெற்ற ஆண்டாள் என இருவரது குறிப்புக்களையும் ஒருசேர ஒரு பாவில் இடுகிறான்.

யானைகளிலும் தேர்களிலும் வந்த அரசகுமாரிகளும் மற்றை அரசகுடும்பப் பெண்டிர்களும் சந்திரசைல மலையடிவாரத்தில் இறங்கினர். அவர்களை அங்குள்ள மயிற்கூட்டங்கள் சுற்றிவந்து சஞ்சரித்து நின்றன. இங்கு கம்பன் ஏதுதற்குறிப்பேற்றவணியில் மயில்கள் அங்கு சுற்றுவதற்குக் காரணம் கூறுகிறான். பெரியாழ்வாரும் ஆண்டாளும் அவனுக்குக் கைகொடுக்கிறார்கள்.

கொவ்வை நோக்கிய வாய்களை இந்திரகோபம்
கவ்வி நோக்கின வென்றுகொள் காட்டின மயில்கள்
நவ்வி நோக்கியர் நலங்கொள் மேகலை பொலஞ்சாயல்
செவ்வி நோக்கின திரிவன போல்வன திரிந்த.
(பால காண்டம் - வரைக்காட்சிப் படலம்)

கோவைப்பழம் போன்ற சிவந்த வாயினைக்கொண்ட அந்த மகளிரை, மயில்கள், இவர்களை இந்திரகோபப் பூச்சிகள் கவர்ந்துள்ளன என்று நினைத்து, தாம் அந்தப் பூச்சிகளை உண்ண வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, அதை நிறைவேற்ற அவர்களது மேகலை போன்ற சாயலை உடைய தம் கலாபங்களைக் காட்டிக் கொண்டு, அவர்கள் அருகிலேயே, உங்கள் சாயல் எங்களிடமும் இருக்கின்றன பாரும் என்று காட்டித் திரிந்தன என்கிறான்.

நாம் மேலே பெரியாழ்வார் பாசுரங்களிலிருந்து பெற்ற இந்திரகோபம் என்ற இப்பூச்சிகள் மலையடிவாரத்தில் எங்கும் பரவி இருக்கும் என்பதும், அது சிந்துரம் அதாவது சிவப்பு நிறத்தில் இருக்குமென்பதும், சிவந்த நிறத்ததான உதடுகளுக்கு உவமிக்கத் தகும் என்பதனையும் அழகாகக் கம்பன் இவ்விடத்தில் கையாண்டது ஆழ்வார் பாசுரங்களில் கம்பன் எவ்வளவு ஆழங்கால் பட்டிருக்கிறான் என்பதைக் காட்டும். ஆழ்வார்களும் பின்வரும் இலக்கியங்களுக்குக் கொடுத்துள்ள கொடையையும் இது உணர்த்தும். ❊

ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' தை மாதம் முதல் இயங்கி வருகிறது.

முகவரி மற்றும் விவரங்களுக்கு:

'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்:
044 - 4322 9401.

நிர்வாகம்:
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.

ஸ்ரீ:

அருமறை போற்றும் அன்னங்கள்

ஸ்ரீமதி வஸுமதி எஸ். ராஜன், பெங்களூரு

உயிரினங்களில், பறவைகளின் ஸ்தானம் அற்புதமானது! இயற்கையோடு மட்டுமின்றி நம் வாழ்விலும் இணைந்து வாழும் இப்பறவைகளின் மூலம், மனிதன் இன்றியமையாத பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆதியில் பக்ஷிகளின் ஒலியைக் கொண்டே நேரத்தைக் கணக்கிட்டனர்! மழை வரும் அறிகுறியையும், நீர் நிலைகள் இருக்கும் இடத்தையும் கண்டறிந்தார்கள்! அவற்றின் ஒலியைக் கொண்டே, இரையைத் தேடக் கூவுகிறதா, தங்கள் குஞ்சுகளுக்குத் தன் வரவை அறிவிக்கும் ஒலியா, தம் இனத்துக்கு வரவிருக்கும் ஆபத்தை அறிந்து எச்சரிக்கும் ஒலியா, அல்லது தங்கள் துணையைத் தேடுகிறதா என்றெல்லாம் அறிந்து வைத்திருந்தார்கள்

சிற்றஞ்சிறுகாலே பறவைகள் எழுப்பும் இனிமையான ஒலி, நம்மைத் துயில் எழுப்பும்! ச்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனை நாம் அதிகாலையில் 'ஸுப்ரபாதம்' பாடி துயில் எழுப்புவதற்காகவே அவை, நம்மை எழுப்புவதாக ஸ்ரீ ஆண்டாளின் திருவுள்ளம்! மக்கள், காலப்போக்கில், மயில், குயில், கிளி, அன்னம், காகம், கருடன் போன்ற பல்வேவேறு பறவைகளின் தனித்தன்மை வாய்ந்த செயல்களை அறிந்தனர், வியந்தனர்!

அன்னமானது பாலையும் நீரையும் பிரிக்கும்! காகம் கரைந்தால் விருந்தினர் வருகை! கிளியானது சொன்னதைச் சொல்லும்! புறா தூது செல்ல ஏற்றது! குயிலின் குரல் இனியது! மயில் தோகை விரித்து ஆடினால் மழை வரும்! கருடனை வானில் பார்த்தால் நல்ல சகுனம் என்று மகிழ்வது, வணங்குவது போன்றவற்றை நம் முன்னோர்கள் காலம் காலமாகச் சொல்லி வந்தனர். இவையெல்லாம் நம் லௌகீக வாழ்வில் நடப்பவை. ஆனால் இவற்றுக்கு மேலாக நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பறவைகளுக்கு உயர்ந்ததான கௌரவமும் ஆசார்ய ஸ்தானமும் கூட உண்டு! அவற்றை சற்றே காண்போம்!

திவ்ய ப்ரபந்தப் பாசுரங்களில் பறவைகள்

ஆழ்வார்கள் தங்கள் ஸ்ரீ ஸூக்திகளான நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களில், கருடன், கிளி, குயில், மயில் போன்றவற்றைப் பற்றி அனேகம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர். பக்ஷிகளின் தலைவனான கருடனையிட்டு பெருமாளை அழைக்கிறார் பெரியாழ்வார், ''பறவை ஏறு பரம் புருடா'' என்கிறார்! ஸ்ரீ ஆண்டாளும் ''புள்ளும் சிலம்பின காண் என்றும் புள்ளரையன் கோயில்'' என்றும், ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் ''புலம்பின புட்களும்'' என்றும்

பலபடியாகப் பாசுரமிட்டுள்ளனர் கருடபக்ஷியை ஸ்ரீ கருட பகவான் என்றும் கருடாழ்வார் என்றும் சிறப்புப் பெயரிட்டுக் குறிப்பிடுகிறோம்! வேதாத்மா விஹகேச்வர: என்றபடி வேதமே வடிவெடுத்தவர் என்று இவர் போற்றப்பெறுவதுடன் இவரே பெரியாழ்வாராக அவதரித்தார் என்பதும் சிறப்பு. மேலும் எம்பெருமானுக்கு அநவரதம் கைங்கர்யம் செய்யும் நித்ய ஸூரிகளுள் ஒருவரன்றோ இவர்! எம்பெருமானுக்கு, வாஹனமாகவும், கொடியாகவும் திகழ்கிறார்!

ஆதி கவி என்று போற்றப்படும் வால்மீகி பகவானின் திரு வாக்கினின்று வெளி வந்த மதுரமான சொற்களே இராமாயண காவியமாயிற்று. அவரை குயில் என்று கூறுவதுண்டு. ''கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம் ஆருஹ்ய கவிதா சாகாம் வந்தே வால்மீகி கோகிலம்'' என்று ப்ரஸித்தம்! குயில் பாடியது ராமகாதை என்றால் கிளி பாடியது கண்ணனின் கதை! ஸ்ரீபாகவதம் பாடிய ஸ்ரீ சுக ப்ரும்மம் அழகாய் பேசிய ஒரு கிளியன்றோ! இப்படி ஒரு கிளி தன்னுடைய கண்ணனைப் பேசியதால்தானோ என்னவோ ஆண்டாளும் கிளியை மிக நேசித்தாள்! வளர்த்தாள்! மிகவும் பிடித்தமான பறவை. கோவிந்தா, கோவிந்தா என்றே எப்போதும் சொல்லும்படி பழக்கி வைத்தாள். கிளி இல்லாமல் ஆண்டாளைப் பார்க்கவே முடியாது!

பறவைகளும் ஆசார்யர்களும்

பக்ஷிகளுக்கு அழகான இரண்டு சிறகுகள் இருப்பதைப் போல, ஆசார்யர்களுக்கும் சிறகுகளாய் இருப்பவை, ஜ்ஞானமும், அனுஷ்டானமும் என்பர் பெரியோர்! தங்கள் ஞானத்தைக் கொண்டு நம் ஆத்மாவுக்கு உகந்ததான ஸத்விஷயங்களை போதிப்பதுடன் தாமும் அவற்றை அனுஷ்டித்தும் காட்டுவோர்

இவ்வன்னங்களாகிய ஆசார்யர்கள். தங்கள் கருணையாலும், வாத்ஸல்யத்தாலும் உயர்ந்து நிற்கும் இவர்கள் அன்னப்பறவைபோல் நீர் கலந்த பாலிலிருந்து பாலை மட்டும் பிரித்தெடுத்து பருகும் இயல்பினர். விவேகமும், பரிசுத்தியும் கொண்ட இவர்கள், அஸாரமான விஷயங்களைத் தள்ளிவிட்டு, ஸாரதமமான விஷயங்களையே கிரஹித்துக் கொள்வார்கள். இரைதேர்வண் சிறு குருகாய் தங்கள் சிஷ்யர்களுக்கு, அவர்கள் கொள்ளத்தக்க விஷயங்களையே ப்ரமாணங்களுடன் எடுத்துரைப்பர். அறுகால் சிறுவண்டென சங்கம், சக்கரம் தரித்த திருமேனி உடையவராய், திருமந்த்ரம், த்வயத்தம், ஆறு அங்கங்கள் கொண்ட ப்ரபத்தி ஆகியவற்றைத் தாங்கள் அனுஷ்டித்தவாறே, தங்களை அண்டி வந்த சிஷ்யர்களுக்கும் போதிப்பர்!

ஸ்ரீமந்நாராயணனை நமக்கு அறிய வைப்பதும் அடைய வைப்பதும் ஆசார்யர்களே! எம்பெருமானுக்கு அந்தரங்கமான இவர்களை 'கடகர்கள்' (இணைப்பவர்கள்) எனறு சொல்வதுண்டு. நமக்கும் எம்பெருமானுக்கும் இடையில் பாலமாக இருப்பவர்களன்றோ இவர்கள்! ஆசார்யர்களை தெய்வம் போல் (தேவவத்) உபாஸிக்க வேண்டும் என்கிறது வேதம்.

எம்பெருமானே நம் முதல் ஆசார்யன்

எம்பெருமான் அவதார தசையில் கீதாசார்யனாகவும் அர்ச்சையில் தானே ஆசார்யனுமாய் சிஷ்யனுமாய் அவதரித்தான்! இப்படி பத்ரிகாச்ரமத்தில் எழுந்தருளியிருந்து திருமந்த்ரத்தின் பெருமையையும், அம்மந்த்ரத்தில் சொல்லப்பட்ட எம்பெருமானின் பெருமையையும் சிஷ்யனுக்கு உபதேசித்தார் அடுத்து, திருநாங்கூர் திவ்ய தேசத்தில் திருமங்கையாழ்வாருக்கு, திருமந்திரத்தின் பெருமையை போதித்து, ஆழ்வாரைத் திருத்திப் பணிகொண்டார். இருள் மண்டிக்கிடந்த மக்களின் நெஞ்சுக்கு இருள்கடி தீபம் ஏற்றி அருள் புரிந்தவரன்றோ இவ்வாழ்வார்!

இனி, திவ்யப்ரபந்தத்தில், ஆழ்வார்கள் தங்களுக்காக பறவைகளைஎம்பெருமானிடம்தூதாகஅனுப்பியதைப் பார்க்கலாம். ஆழ்வார்கள் எம்பெருமானிடம் கொண்ட பரம பக்தியின் மேலீட்டால், அவனை அடைய வேண்டும் என்ற த்வரையினால் நாயிகா பாவத்தை அடைந்தார்கள். எம்பெருமானை விட்டு க்ஷணநேரமும் பிரிந்திருக்க முடியாத ஆற்றாமையால், அவனுடன் ஸம்ச்லேஷத்தை (கூட) வேண்டி, சில பறவைகளை எம்பெருமானிடம் தூதாக அனுப்புகிறார்கள். இப்படி நாயிகா பாவத்துடன் பாடினர் ஸ்வாமி நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும்!

ஸ்ரீ ஆண்டாள் இயற்கையாகவே பெண்ணானதால், கண்ணன் எம்பெருமானைத் தான் அடைய வேண்டும் என்று ஆசை கொண்டாள். மேகத்தையும் சில பறவைகளையும் தூது விடுகிறாள். பகவத் ப்ராப்திக்கு, ஆசார்யர்கள் உதவுகிறபடியால், ஆழ்வார்கள் எம்பெருமானிடம் தூது விடும் பறவைகள் ஆசார்யர்களே என்பது ஆன்றோர்களின் கருத்தாகும்! ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவையில் 'புள்ளும் சிலம்பினகாண்' என்ற பாசுரத்தில், உள்ளுரைப் பொருளாக, ''பறவைகளான பரம பாகவதர்கள்'' என்கிறது வ்யாக்யானம். பகவத் குணானுஸந்தானம் பண்ணிக் கொண்டு தத்தம் வர்ணாச்ரம தர்மங்களைச் செய்வதற்காகப் புறப்பட்டார்கள் என்று சொல்கிறாள்.

'கீசுகீசென்று' என்ற பாசுரத்தில், பரத்வாஜ பக்ஷிகள், விடியற்காலையில் இங்கும் அங்கும் திரிந்து கூவுகின்ற த்வனி ஆசார்யர்கள் திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகம் இவற்றைக் குறித்து, ஒன்றின் அர்த்தத்தை மற்றொன்றில் ஒப்பிட்டுப்பார்ப்பது போல் உள்ளது என்கிறாள். நாச்சியார் திருமொழியில் 'காலை எழுந்து' என்ற பாசுரத்தில், குருவிக்கூட்டங்களின் இனிய ஒலி, மாலின் வரவைத் தனக்கு சொல்வது போல் உள்ளது என்கிறாள். ஸ்ரீ வைஷ்ணவனானவன், விடியற்காலையில், ஹரி நாமத்தை ஏழு முறை உச்சரிக்க வேண்டும் என்று சாஸ்த்ரம் விதித்ததை, பறவைகளும் அனுஷ்டிக்கின்றன என்கிறாள். அடுத்து, 'மென்னடை அன்னம் பரந்து விளையாடும்' என்ற பாசுரத்தில், எம்பெருமானை என்னிடம் வரும்படி கூவுவாய் என்று குயிலிடம் சொல்லி, அதற்குப் ப்ரதி உபகாரமாக, தான் ஆசையாய் பாலமுதூட்டி வளர்த்த கிளியை, அதற்கு உற்ற தோழியாக ஆக்குவதாகக் கூறுகிறாள்.

இதுபோல் நம்மாழ்வாரும் தான் அருளிச்செய்த திருவாய் மொழியில், நாயிகா பாவத்தில், எம்பெருமானின் விச்லேஷத்தைப் பொறுக்காதவராய், பசலை நோய் வாட்ட, நாரை, கொக்கு, குயில், அன்னம், அன்றில் பறவை, வண்டுகள் போன்றவற்றைத் தூதாக அனுப்பி, தன் நிலையை எம்பெருமானுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று இறைஞ்சுகிறார். திருவிருத்தத்தில், 'இன்னன்ன தூதெம்மை' என்ற பாசுரத்தில், அன்னங்களைப் பார்த்து, நீங்கள் பெடையோடு கூடியுள்ளதைப் போல நானும் எம்பெருமானோடு கூடியிருக்க வேண்டும் என்று தன் அவாவை அன்னங்களைத் தூது அனுப்பி வெளிப்படுத்துகிறார்.

அந்த, அன்னங்களையே ஆசார்யராக பாவித்து, தன்னை பெருமானோடு சேர்த்து வைக்க, 'இனிமையான சொற்களைச் சொல்வீர்களாக' என்று வேண்டுகிறார் திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகத்தில் 'அஞ்சிறைய புட்கொடியே ஆடும்' என்று திருவரங்கப் பெருமானிடமும் 'பொறியமர்ந்த அறுகால் சிறு வண்டே' என்று தேரெழுந்தூர் பெருமானுக்கும்

ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்
ப்ரஹ்மோத்ஸவம் ஜூன் 11 (வெள்ளி) முதல் ஜூன் 20 (ஞாயிறு) வரை
ஸுதர்சன ஜயந்தி ஜூன் 20 (ஞாயிறு)
பெரியாழ்வார் சாற்றுமுறை ஜூன் 21 (திங்கள்)
நாதமுனிகள் சாற்றுமுறை ஜூன் 23 (புதன்)
ச்ரவணம் ஜூன் 27 (ஞாயிறு)
கோடை உத்ஸவம் (7 நாட்கள்) ஜூலை 10 (சனி) முதல் 16 (வெள்ளி) வரை

'செங்கால மட நாராய்' என்று திருக்கண்ணபுர நாயகனுக்கும் பறவைகளைத் தூதாக அனுப்புகிறார்.

ஆழ்வார்களுக்குப் பின்னால் அவதரித்த ஆசார்ய ச்ரேஷ்டரான ஸ்ரீதேசிகன், தான் அருளிச் செய்த பகவத் த்யான ஸோபானம் என்னும் ஸ்தோத்ரத்தில், ஸ்ரீரங்கம் காவேரிக்கரையில், அன்னங்கள் அழகாகச் சூழ்ந்து விளங்குவதைக் கூறி, இவ்வன்னங்களை, யோகச்ரேஷ்டர்கள், ஆழ்வார்கள் மற்றும் எம்பெருமானார் என்று காட்டுகிறார். இவர்கள் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் வஸிப்பதையே உயர்வாக கருதுகிறார்களாம். அடுத்து ஸ்ரீதேசிகன் தாம் அருளிய பாதுகா ஸஹஸ்ரம் என்னும் உத்தம க்ரந்தத்தில் எம்பெருமானின் பாதுகைகள் அஹல்யைக்கு ரக்ஷணம் கொடுத்த செயலை, பர்ணசாலையில் உள்ள முனிவர்கள் பேசக்கேட்டு, அங்குள்ள கிளிகள் கூடுகளிலிருந்து விழித்தெழுந்து, இதையே கூறிக்கொண்டிருந்தன என்கிறார்!

ஒரு வைஷ்ணவனின் லக்ஷணத்தைப் பற்றி அனந்தாழ்வான் என்ற ஆசார்யர் சொன்னது 'கொக்கைப் போலிருப்பான்' என்பது! 'ஓடுமீன் ஓட உரு மீன் வருமளவும் காத்திருக்கும் கொக்கு' என்பது போல, அற்பமான விஷயங்களை அறிய ஆவல் கொள்ளாமல், ஆத்ம ஸ்வரூபத்திற்குத் தகுந்த விஷயங்களை அறிவதற்கே ஆர்வம் கொள்ள வேண்டும் மற்றும் குப்பையைக் கிளறி மாணிக்கத்தை எடுக்கும் கோழியைப் போல, அஸாரமானவற்றிலும் ஸாரதமமானதைத் தேடி எடுக்க வேண்டும் என்று பறவைகளை உதாரணமாகக் காட்டி கூறுகிறார்!

இங்ஙனம் நம் ஆசார்யர்களின் நற்குண நற்செயல்களுக்குப் பறவைகளை மேற்கோள் காட்டிப் போற்றினர் நம் ஆன்றோர். ''ஆசார்யர்கள் போற்றத்தக்கவர்கள். அவர்கள் துணை கொண்டே எம்பெருமானை நாம் அடையவியலும். பகவானிடம் நடந்து கொள்வதுபோல், ஆசார்யர்களிடமும் பக்தியுடன் நடந்து கொள்ளவேண்டும்'' என்பது வேதம் வகுத்த வழியாகும்!

ஸ்வாமி தேசிகனும் ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை இருள் அனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே! என்று அருளிச் செய்தார். இப்பாசுரத்தை எப்போதும் நினைவில் கொண்டு, அதன்படி ஆசார்யர்களைப் போற்றி அவர்கள் நிழலும் அருளும் பெற்று வாழ்வோம்! ✻

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,

மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

22. Sri Nyasa Vimsathi

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The doctrine of surrender or Prapathi receives a more extensive exposure at the hands of Swami Desika in Sri Nyasa Vimsathi. That this is the only hymn the author has chosen to supplement with his own commentary in Sanskrit, catapults its significance to great heights.

Comprising 22 Slokas, this forms the central piece of the triplet of hymns on the subject (collectively known as Nyasa Thrayee) by our great Acharya. This Sthothra, by systematically and unequivocally establishing the imperativeness, efficacy and unfailing nature of the means, puts to rest any possible scepticism. Therefore, every Prapanna (one who has performed Saranagathi) would do well to include this also in his/her daily recitation routine.

Some of the salient issues covered in Nyasa Vimsathi are: Qualities of a model preceptor; reasons why an Acharya is on par with God; requisite virtues of a disciple and duties of a guru; cardinal concepts a spiritual teacher needs to impart to his student; governing rules of Bhakthi and Prapathi; greatness of Prapathi; indispensable nature of unswerving loyalty (Mahaviswasam); Prapathi being a direct and independent means of salvation; how to conduct oneself after performing Prapathi, among other things.

Opening the hymn, Sri Desika prescribes the following 14 points as the ideal qualities a preceptor must possess for a disciple to take recourse to for spiritual elevation. Accordingly, a model Acharya should be:

1. Well-founded in our exalted tradition
2. Strong-minded and determined
3. Of absolutely flawless nature
4. Well-versed in Vedas and Vedanthas
5. Full of devotion to the Lord
6. Good-natured and magnanimous
7 Committed to truth and devoid of deceit
8. One who conducts himself in the manner prescribed in the scriptures
9. Free from vices like boastfulness, jealousy, etc.
10. Steadfast in his adherence to self-control
11. One who can be a torch-bearer forever
12. One who oozes compassion
13. Committed to correcting an erring disciple
14. A well-wisher of everyone

The requisite virtues (15) of a disciple are enlisted in the third Sloka. And it is the duty of the Acharya to take under his tutelage one who fulfils these qualities, without any inhibition. Thus, a perfect disciple should be:

1. Of noble thoughts
2. One who mingles with devotees
3. Honest and disciplined
4. Deep-rooted in his quest for knowledge
5. With an attitude to render service to the Acharya
6. Free from self-conceit
7. One with an innate sense of reverence to the Acharya
8. One with a tendency to wait for the right time to get his doubts clarified by the Acharya
9. With complete control over his senses
10. Straight forward and of disciplined mind
11. Free from envy and fault-finding
12. One to take refuge at the feet of the Acharya
13. With an implicit faith in the scriptures and lessons taught by the Acharya
14. Willing to subject himself to any test for assessment by the Acharya

Lord Varadaraja

15. One with an eternal gratitude towards the Acharya for his invaluable help, which is impossible to pay back

In the fourth verse, Swami Desika delves on the cardinal concepts of our philosophy — well encapsulated in Moola Manthram, Dhvayam and Charama Slokam — that the Acharya needs to imprint in the mind of the eligible disciple. They are: a) Lord Narayana, in association with His Consort Lakshmi, is the sole form, cause of sustenance, effort and ultimate goal of everything in the universe; b) You ought not to consider anyone/thing else as the goal to be attained; c) Do not reckon anyone else as the means of salvation (Upaya); d) Be aware that our worldly fear and its removal originate from Him only; e) Never ever breach His commandments that are spelt out in the scriptures.

Forwarding a logical and irrefutable argument for Prapathi Sasthra in the sixth Sloka, Sri Desika says, "It is common knowledge that one approaches a person who is both generous as well as capable, to get what he wants. This has been established in the scriptures by sages. There is no dispute over that in any text of authority. That being the case even with ordinary persons, what can one say about Bhara Nyasa, a great means, when it is performed at the feet of none less than Sriman Narayana, who is all-powerful and an ocean of compassion! Thus, Bhara Nyasa assumes the proportion of a Bramha-Vidhya as affirmed in legends." Those who have been beneficiaries of the doctrine of surrender in the past as shown in the scriptures and who readily come to one's mind include Sugriva, Kakasura, Vibheeshana, Dhraupathi, Gajendra, Thrisanku.

Prescribing guidelines for post-Prapathi conduct, Swami Desika has the following to say in the 19th Sloka. "Avoid doing rites that are means of material ends. But never give up Nithya Karmas (daily mandatory routines like Sandhya Vandhanam etc.) and Naimithika Karma (ordained in the scriptures like Pithru Tharpanam, that is, propitiation of the departed forefathers etc,). Do not commit offences of omission and commission and those against devotees of the Lord (Bhagavatha Apacharam). Do appropriate atonement when unknowingly committing an offence. Strive to enhance knowledge and devotion. Put up with pleasure and pain (results of Punya and Papa respectively) with equal ease. Aspire for things that would serve as tools for more determined service to the Lord. Wish for the prosperity of devotees of the Lord. All these prayers, noble as they are, ought to be submitted only at His feet."

In the penultimate verse, the author states that he has expatiated in this hymn the doctrine of surrender which has been established in the scriptures and by the Lord in His own words, based on the great works of Poorvacharyaas. This he has done for the benefit of learned men, in this world and beyond.

The final Sloka serves as icing on the cake for this great work. Here, the supreme Acharya recapitulates the essence of the hymn in an animated address to Lord Varadaraja. "I am bestowed with the blessing glance of my Acharya that would negate the ill-effects of the whirlpool of Samsara. I have cast off other means. Improper thoughts and conduct are far from my mind. I am rid of all doubts as regards the ultimate truth. O Varada! Saviour and of boundless compassion! I have chosen You as the means and end of Moksha and have laid down the responsibility at Your lotus feet and have thus become free from fear and burden." A telling statement from a totally relieved mind, indeed!

To be continued…

Sponsorships and donations towards publication expenses are welcome

வைகாசி ச்ரவணம் ஆஸ்தானம்

லகு ஸம்ப்ரோக்ஷணம் இரண்டாம் நாள் சயனாதி வாஸம்